S. R. கமலம்

உ

வேலுமயிலுந் துணை.

நூதன கிராம்போன்

சங்கீதகீர்த்தனாம்ருதம்

(ஒன்பதாம் பாகம்)

10-இன்ச் D/S. தமிழ் ரிகார்டுகள்.

கிரீன் லேபில் ரிகார்ட்.

கொடிமுடி

K-B சுந்தராம்பாள் பாடியது.

பிளேட் நே. 7: ஆலோலமென்று கூவினாள்.

பல்லவி.

ஆலேர்லமென்று கூவினாள் தினைபுனத்தில்
ஆலோலமென்று கூவினாள் பரன்மீதில் ஆ

அநுபல்லவி.

பாலோ சுவைசே ரமுதாலே மகித்ததிந்த
பைந் தொடியாளின் இடச நலமென
இந்து வதனமுள்ள எழில் சோபிதமே ஆ

சரணம்.

சடகாகரங்கள் மின்னவே சோ! சோ!
எனும் சொல் கனிவாய் சுரங்கள் பன்னவே
கமல மலரை நிகழும் பழமை நிலவிய
கனமணி பணிகள் எழிலொரு பழகிய
கதித்த வீணைதானென உவமை உரைக்க
கவணொர்ந்து பரன்தனிசிறந்து
மகிழ்வாய் மனதுவந்து மதிமயங்கி விரைவாய் ஆ
வங்கு கன்னடம் மலையாளம் முதல் திராவிடம்
மதித்த வேதத்தினியவன் போலே
புனிதமான கியானேஸ்வரியை
காணகாணேன் இனியாவளே ஆ

பிளேட் நெ. 168

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

சிவலோக நாதனைக் கண்டு
சேவித்திடுவோம் வாரீர் நீங்கள் சிவ

அநுபல்லவி.

பவமயங்களைப் போக்கி அவர்
பரமபதத்தைக் கொடுப்பாரந்த

சரணங்கள்.

அற்பசுகத்தை நினைத்தோம் அந்த
அரன் திருவடி மறந்தோம்
கற்பிதமான ப்ரபஞ்ச மீது
கானல் ஜலம் போலே எண்ணி சிவ

மானிட ஜன்மம் கொடுத்தார் தன்னை
தன்னைக் கரங்க ளளித்தார்
தேனும் பாலும் போலே சென்று
தேரடியில் நின்றுகொண்டு சிவ

செங்கோட்டை ஸ்ரீமான்

S. G. கிட்டப்பா பாடியது.

பிளேட் நெ, 5. தசரதராஜ குமாரா.

ஸ்ரீராமர் தரு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

தசரத ராஜகுமாரா அலங்காரா
சுகுமாரா அதிதீரா தச

அநுபல்லவி.

இசை பெருகியரகு வம்ச திலாக்யம்
எழில் பிருர்வாக்யபரி பாலனயோக்யம்
வசைதவறியதனல் வரும்பெரும் பாக்யம்
மனதினிலுணர் தம்பி பரதா சுகபுனிதா
சத்யவிரதா அதிவிரதா தச

பரதன் தரு.

பல்லவி எடுப்பு

கௌசலை மகிழும் விநோதா குணநீதா
ரகுநாதா என்மேல் வாதா கௌ

அநுபல்லவி.

தாய்செய்த வினையினால் தவிழநொந்தேனே
தாணியிலிகழையுந் தானடைந்தேனே
நேயமுடனேயும தடிபணிந்தேனே
நிச்சயமிது ததிவாரும் துயர்தீரும்
அருள் தாரும் எனைக்காரும் கௌ

ஸ்ரீராமர் தரு.

சரணம்.

வருடமீரேழு வனத்தினிற் கழித்தே
வருவேன யோத்திமா வளர்நகரடுத்தே
அருமை பெருமையுன தன்பினை நினைத்தே
அதிதுரிதமுடனே வருவேன் அருள்புரிவேன்
ஆசிதருவேன் தவறிடேன் தச

பரதன் தரு.

சரணம்.

உமதருந் தரிசனம் என்றுகாண்பேனோ
உத்தமா வுமை பிரிந் துயிர் தரிப்பேனோ
அமையும் அயோத்திமா நகரடைவேனோ
ஐயோசகியே னென தண்ணா அருட்கண்ணா
மணிவண்ணா யெனதண்ணா கௌ

பிளேட் நே. 2 காமிசத்யபாமா.

இங்கிலீஷ்பாட்—பாரிஜாத புஷ்பஹரணம்.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

காமிசத்யபாமா கதவைத்திறவாய் காமி

அநுபல்லவி.

கதவைதிறவாய் திறவாய்
திறவாய்
திறவாய் எந்தன் காமி

சரணம்.

பூமியுகழ் க்ஷேமன் புழுதியணிந்தவாயன்
நேமி வசந்தன் நானடி
நானடி
நானடி எந்தன் காமி

அக்ரமங்கள் செய்திடும் அசுரரையழித்திடும்
சக்ரதரனும் நானடி
நானடி
நானடி யெந்தன் காமி

மதுரை பபூன் N. S. ஷண்முகம்

பாடியது.

பிளேட் நே, 4. வாங்கவாங்களடி லவண்டிகளா

காமிக் பாட்டு.

வாங்க வாங்களடி லவண்டிகளா — அந்த
வாத்தியார் சட்டாம் பிள்ளையை கண்டிங்களா
போங்கோ போங்கோளடி பெண்டுகளா—ஒரு
புருஷனுக்கு ஆசைபட்டு நின்றிங்களா?

நீங்கள் புத்திகெட்டு தானே
புறப்படுங்கடி மானே
நித்தியமுந் தானே
நிலைக்குலைக்கு மானே
நீல கருங்குயிலே
நீயும் நானும் போகையிலே
நீயும் நானும் போகையிலே
நிலா பிறக்கையிலே
சிதம்பரம் காணையிலே

சிங்காரம் காணுதடி உங்களுக்கு
ஜீவனங்கு நிற்குதடி

செல்லு செல்லு திருச்சிநகர் செல்லு
செல்லு செல்லு திருவாரூரு செல்லு

ஜல்னு திருச்சிநகர் ஜல்லு திருவாலூரு ஜல்லு
திருமதுரை ஜல்லு யிளிச்சி கிட்டான் பல்லு
ஜீனுபட்ட ஜல்லு ஜில்லு ஜில்லு
திருச்சிநகர் ஜல்லு திருவாலூர் ஜல்லு
திருமதுரை ஜல்லு சிரிக்கவேண்டாம் பல்லு
ஜீனிபட்டா ஜில்லு ஜில்லு

பிளேட். நே. 19, சைனு ஜப்பான்.

சைனு ஜப்பான் ரங்கோன் பர்மா சல்லா சில்கு காரியே
மைனு பிடிக்காதடி மாருட்டம் போடாதடி
மதிக்கும் ஈகோ செண்டு சோப்பு
மாறி போச்சு கிருப்பு சீப்பு சை

நாகரீகம் பெருக்கப் பெருக்க
தற்கால உலகத்தில் நடைமாறி போச்சு சை
தேகம் வெளுத்துப் போச்சு சிங்காரப்பின்னலாச்சு—அடி
செந்தூரஞ் சாந்து சந்தியில் போச்சு
இந்தியர் காலம் இப்படியாச்சு சை

அந்த நாட்டுக்கோட்டை பீயூட்டியே
எதேஷ்டமாய் வரைந்தது
வீட்டுக்கொரு காருமுண்டு
விளையாட்டு சரஸமுண்டு
வெட்கக்கேடு வெளியில் சொன்னால்
அக்கம்பக்கம் சிறிக்கும்பின்னால் சை

மதுரை ஒரிஜனல் பாய்ஸ்

கம்பெனியார் பாடிவருவது.

(பக்தியா கேலியா என்ற மெட்டு.)

இராகம்-ஆனந்த பைரவி-தாளம்-ஆதி.

இதை அக்ஷர காலமாகவும் பாடலாம்.

பல்லவி.

பக்தி கொண்டாடுவோம் அனுதினம் ப

மகுடங்கள்

சமம். பகரிரு வினையகலவே யிக பரசுகம்
பரஹரகா சரவண பவனென ப

சமம். பரங்குன்றில் தினந்தொண்டர் சரண்கொண்ட
பரமனருட் குமர முருகனே ப

விஷமம். பவ சாகரத்திலே கிடந்து
தவியா விதத்திலே தொடர்ந்து ப

சமம். பாதப்புவி மினுசுகிர்தச்
சமரச விரதப்பரிவுடன் ப

சமம். பஞ்சவச் சுதிக லந்திடச்சுரல
யங்களுற்றிலகு பண்படித்துப் ப

விஷமம். பகையவர் மடுக்கும் ஜெயவலமிடுந்திண்
புயமணி கடம்பன் ப

சமம். பட்டினத்துறவி சுக்ல முற்பவியி
சித்திரக்கவிதி ருப்புகழதின் ப

விஷமம். பண்பென்றுந் தங்குஞ் சொந்தன்
கந்தன்றன் இன்பம் பொங்கிய ப

சமம். பருவத ராஜபுத்ரி யருளிய வேடில்பிடித்த
ஆறுமுக நாதனைப் ப

அநுபல்லவி.

சித்தர் பொதியை மலை த்யானங் கமழும் நிதி
சீர்த்தி கார்த்திகேய மூர்த்தி பிரார்த்தனைக்கொள்
நேர்த்தி நிர்மய
நீதி தம்பிரான் பொற்பாத ப

சரணம்.

நிகழும்லோக வாழ்விது சாதமெனவனு
தினமும் வீணில் மாதராசை பெருகியே
வெகு விரோத லோபி நாம விமரிசை
விளையும்பாழும் மாய்கை சூழு மிடியுற
அகமும்வாடி நோய்களாலே மெலியவு
மமுதம் வாயிலே கிடாது ஒருகியே
வகையிலாது சேய்களோடு மனைவியும்
கதறிவீழ நாடி பேத கணமதில்

நமனும் வந்துயிரைக் கவரவும் பிணமாய்ச்
சுடலையண்டி நம துடலும் வெந்தழியும்
நாளிலே நம்

ராகம் விஸ்தாரமாய் பாடவும்.

நாடுமெங்கே பெரிய வீடுமெங்கே
பெற்ற மக்களெங்கே வைத்த ரொக்கமெங்கே
சொந்த தேவியெங்கே கொத்து சாவியெங்கே
ஏறும் மோட்டாரெங்கே நல்ல பீட்டனெங்கே
பூந்தோட்டமெங்கே நேயர் கூட்டமெங்கே
பூசும் மணமுமெங்கே சுவை வுணவு மெங்கே
போதை வஸ்துமெங்கே தின்ன மஸ்துமெங்கே
ஷோக்கு நடைகளெங்கே கட்டும் உடைகளெங்கே
பஞ்சு மெத்தையெங்கே லேடி முத்தமெங்கே
காப்பு நன்செய் யெங்கே தோப்பு புன்செய் யெங்கே

பாட்டு.

நாடி வருவதெது பாவ புண்யமல்லாது
நாமரையிலணியுங் கோவணமும் வாராது
நன்று சுந்தரன் செஞ்சா விங்கிதந் ததும்பும்
நாகரீக மாமயில் பாகன் யோகன்
பரிமள தேகன் யூகன் திராவிட
நட்புமிக்க வைத்தபுத்தேள் வித்வ பொக்ஷ
சக்ரவர்த்தி
நயமுற்றிட க்ருபை நாட்டும்
அருளமு தூட்டும் பதவிகாட்டும் பக்தி

மதுரை பபூன்

A. M. கார்மேக ஆச்சாரி பாடியது.

பிளேட் நெ. 419. வந்திருங்கோ திருநாளுக்கு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்.

வந்திருங்கோ திருநாளுக்கு மச்சா மச்சா
வந்திருங்கோ திருநாளுக்கு
ஓ மச்சா வந்திருங்கோ
வந்திருங்கோ வந்திருங்கோ
வந்திருங்கோ திருநாளுக்கு வ

காதிலே போடக் கடுக்கனில்லெ
கெண்ட போட்டா வேஷ்டியில்லெ
நாவல்லே திருநாளுக்கு
மச்சா மச்சா நாவல்லே
நாவல்லே
நாவல்லெ
நாவல்லே திருநாளுக்கு ந

காதிலே போட கடுக்கன் தாரேன்
கெண்ட போட்டா வேஷ்டி தாரேன்
வந்திருங்கோ வந்திருங்கோ வந்திருங்கோ
நீங்க வந்திருங்கோ திருநாளுக்கு
ஓ மச்சா வந்திருங்கோ திருநாளுக்கு வ

பிளேட் நே. 8 பரமசிவம் என்னவரம் கேட்டாராம்

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பரமசிவம் என்னவரம்
வேணுமென்று கேட்டாராம்——கைலெ
பரமசிவம் என்னவரம்
வேணுமென்று கேட்டாராம் அவர்
கேட்டாராம் அவர்
கேட்டாராம் பரம

அவர் அரை பலம் கஞ்சா
வேணுமென்று சொன்னாராம்
சொன்னாராம்
ஓ கணேசா ஓ கணேசா
ஜினுக் ஜினுக் ஜினுக் பரம

பரமசிவம் என்னவரம்
வேணுமென்று கேட்டாராம்
கேட்டாராம் அவர்
கேட்டாராம் அவர்
கேட்டாராம் அவர்
கேட்டாராம் அவர்

அரைப்பலம் கஞ்சா
வேணுமென்று சொன்னாராம்
சம்போ சம்போ சபக் பல்
சம்போ சம்போ சம்போ பரம

கைலை ராஜா அந்த பரமசிவம்
என்னவரம் வேணுமென்று
கேட்டாராம் கேட்டாராம்
ஓ கணேசா ஓ கணேசா பரம

பிளேட் நெ, 3742 குண்டலவண்டின.

குண்டலவண்டின வண்டகமந்தா
கடுப்புலுந்தியக்கா நாயப்பா
கடுப்புலுந்தியக்கா நாயம்மா
கடுப்புலுந்தியக்கா நாக்கு
கடுப்புலுந்தியக்கா நாக்கு
கும்மடி காயபுலுசு நாயம்மாடி
எந்தனோ தினுசு அண்டிகாய
பெண்டகாய வேசி
வங்கா டங்கா வேசி
பப்புனு கொஞ்சம் வேசி—நீண்ட கு

நெய்யுனு கொஞ்சம் வேசி
பப்பு வடலு வேசி—மஞ்சி
அப்பளம்தொம்மிதி வேசி
அந்தாவேசிகலுக்கி பிசங்கி அபப் அபப்க்குனு
திண்டுணி ஜஸ்திணி கு

தொகையறா.

இஞ்சியார் பசூடி கொஞ்சிடும் கிச்சடி
உதவிக்கு காலன் புலிகுட்டான்
ஓலன் என் சஞ்சலம் தீர்ந்திட
அவிமலது வரன்
ஒளிகுட்டான் தீயல் அவிய
ஓர் சம்பந்தி பிரதமையோடு கு

பிளேட் நே, 3685 அம்மாளு உங்கம்மாளுக்கு

அம்மாளு உங்கம்மாளுக்கு மருமக பிள்ளையடி
தங்கம் பிள்ளையடி சொந்த மருமகண்டி
வெப்பாரும் ஒப்பாரும் மைத்துனண்டி
வெம்மாளும் ஒம்மாளும் நாத்தியடி
தப்பாது நானுனக்கு மச்சானடி
இப்போதே தாலியை கட்டவேண்டி
கட்டு வெத்திலே தாரேண்டி
எட்டு பாக்கு தாரேண்டி
டப்பி சுண்ணும்பு தாரேண்டி
போட்டு கூடவா யேண்டி
காமத்து டிக்காகாரி உன்னை தாண்டி
இனியுனக்கென்ன வேணுண்டி
மாமனே கேளடி

போடி உங்கோத்தாயார் சொன்னுள்
பெரியமனுஷன் வீட்டுப் பிள்ளையல்லவா
உனக்கு மாமனல்லவா பல் அம்

முதலில்லாத வியாபாரக்காரனுட மகனல்லவா
நானே சிங்காரனடி நானே ஒய்யாரண்டி
நானே கெம்பீரண்டி நானே கார்மேகண்டி
நாக்குலே மூக்குலே நத்துபுலாக்குலே
பேச்சு பராக்குலே சொல் ஜோக்குலே
டாங்கு டப்ர டோபல்ஷா வயதிலமடி
நல்லா பருத்தி பட்டி குட்டி நல்ல மருந்தடி
தேகமெலிந்து தேஜஸ் குறைந்து
செல்வங் குறைந் திடவே

ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்

பாடியது.

போன் கோதண்டா என்ற மெட்டு.

இர்ாகம்-அடாணு-தாளம்-ஆதி.

பல்லவி.

பஞ்சாமிர்த பாலாபிஷேக யோக பஞ்

அநுபல்லவி.

செஞ்சேவலா தேவா வா வா
சிங்கார செந்தூரா கண்பாராய் முத்துக்குமாரா பஞ்

சரணம்.

தெண்டாயுதப்ரசண்ட பண்டாரமான ஞான
வண்டார் கடம்புலாவு வையாபுரிக்கு ஊயாப்ரசன்ன பஞ்

முருகா முகுந்த நந்த மருகா சங்கீதபாதந்
தருவாய் சங்கரலிங்கேச சந்தப்ரபந்த சிந்துக்குகந்த பஞ்

M. பக்கிரிசாமி முதலியார்

பாடிவருவது.

பயூன் தரு

பூரணச்சந்திரன் பிம்பமோ என்றமெட்டில் பின்னடி வேறு.

கத்திரிக்காய் கூடை கொண்டாடி காசுக்
கொன்னுரெண்டுமூணுநாலஞ் சாரேழெட்டொம்பது பத்து
பத்தும்பத்தும்இருபது இருபதும்பத்தும்முப்பது
முப்பதும்பத்தும்நாற்பது நாற்பதும்பத்தும்ஐம்பது
ஐம்பதும்பத்தும்அறுபது அறுபதும்பத்துஎழுபது
எழுபதும்பத்துஎண்பது எண்பதும்பத்தும்தொண்ணூறு

நூறு

நூறும்நூறும் இரநூறு இரநூறும்நூறும் மூர்நூறு
மூர்நூறும்நூறும் நானூறு நானூறும்நூறும் ஐந்நூறு
ஐந்நூறும்நூறும் அறுநூறு அறுநூறும்நூறும் எழுநூறு
எழுநூறும்நூறும் எண்ணூறு எண்ணூறுநூறும் தொளாயிரம்

ஆயிரம்

ஆயிரம் ரெண்டாயிரம் மூவாயிரம் நாலாயிரம்
ஐயாயிரம் ஆறாயிரம் ஏழாயிரம் எட்டாயிரம்
ஒன்பதாயிரம் பத்தாயிரம் லக்ஷம் பத்துலக்ஷம்
கோடி கோடி அந்த கோடியிலோர் மாடி
அந்த மாடிமீது ஒருலேடி அவளும் நானும் கூடி
சரசசல்லாப மாடி கொண்டாடி கினரூடி பதம்பாடி
ததிங்கிணத்தோம் ததிங்கிணத்தோம் ததிங்கிணத்தோம் க

T. M. மருதப்பா பாடியது.

கோவலன்.

கழுத்தில் விழுந்தமாலை
கழற்ற முடியவில்லை
கன்னியே யென்செய்வேன்
கபடம் யாதோயிது அறியேனுன் க

கத்திரம்பம் கோடாரி
கைவாள்கூர் மழுங்குதே
காரணந்தெரியேனே இன்றேதான்
கருத்தும் குலைந்திடுதே க

கவலை மீறுதே
காதகியால் மனமும் சோருதே
பாதகி சண்டாளி யாலே
பதறி குணம் மாறுதே க

விருத்தம்-செஞ்சுருட்டி.

மாலையும் கழுத்தைவிட்டு வரவில்லை யாது செய்வேன்
மாலையை யிந்தமாது வாங்காமற் போகாள் பாவி
மாலையாலிந்த துன்பம் வந்ததே நாகந்தன்னை
மாலையாய் தரித்தயீசா மனத்துயர் தீர்ப்பாயின்றே.

P. S. பரமேஸ்வர ஐயர் பாடியது.

பிளேட் நெ. 1967 உப்புமாவைக் கிண்டடி.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

உப்புமாவைக் கிண்டி வையடி வையடி
உத்தம பத்தினி சித்தஜ ரத்தினமே
கண்ணே பெண்ணே மயிலே குயிலே நீ உ

அநுபல்லவி.

அப்படியே பாணை தன்னை அடுப்பிலேற்றி தீயை
கப்பிய ஜலமும் விட்டுக் கொப்பென கொதிக்கவும்
உப்பைப் போட்டு உ

சரணம்.

உடனே ரவையைப் போட்டு
உளுத்தம் பருப்பைப் போட்டு
சிறியதாய் மிளகாய் கிள்ளிப்போட்டு
அரிய கடுகு வெங்காயம் போட்டு
சரியா யதனை கொதிக்கப் போட்டு
கருகக் காயம் கூடப் போட்டு
களைந்துப்போட்டு
கிளரிப்போட்டு
மிளகாய் கரிக்கிப் போட்டு
அப்படி யிப்படி திருப்பிப் போட்டு
அனைவருக்கும் சூடாயிருக்கப் போட்டு
தள தள தள பொள பொள பொள
சரிகம பத நிஸ நிஸ நிஸ

பிளாக் லேபில் ரிகார்ட்.

மிஸ் S. R. கமலம் பாடியது.

பிளேட் நெ. 1705 யார்போய் சொல்லுவார்.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

சந்திரமதி.

பல்லவி.

யார் போய் சொல்லுவார் இந்தவேளை
நாதனுக்கோடி யா

அநுபல்லவி.

பாவிச் சந்திரமதி பழிகாரி பெற்றபாலன்
பாம்புக் கடித்திறந்து பரமபதம் சேர்ந்தானென்று யா

சரணம்.

பார்ப்பானுக் கடிமையாகி பரதேசி போல் நாங்கள்
பதைத்து பதைத்துவாடி பலதொண்டு செய்தோமென்று யா

அய்யனின் கட்டளைப்போல் அடவிசென்றுமே பாலன்
அரவந் கடித்திறந்து போழ்ந்தானுயிர் சாய்ந்தானென்று யா

பேய்கள் நரிபுலிகள் பெருத்த வனந்தனிலே
பாவிச்சந்திரமதி பிள்ளையை இழந்தாளென்று யா

T. முருகேச நாயகர் பாடியது.

பிளேட் நே. 3674 திரிலோகமும் புகழும்.

இராகம்-ஸ்ரீராகம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

திரிலோகமும் புகழும் சுந்தர
தீர வீர சூரனனே திரி

அநுபல்லவி.

இன்னாட்டுக் கதிகாரன்
விண்ணாட்டுக் கதிசூரன்
நன்னாட்டுக்கு மதிகாரன்
நாகரீக சம்போகன் யானே திரி

சரணம்.

தரணிபுகழ் கெம்பீரன்
அரிவையர்க் கிசைந்த மாரன்
பரிபூரண சுக வுதாரன்
பாதமீதில் ஓதும் வேதன் நானே திரி

K. S. செல்லப்பா அய்யர் பாடியது.

பிளேட் நே. 1752 ஜெய ஜெய கோகுலபால.

இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜெய ஜெய கோ குலபால
ஜயஸகளா கம மூலம் ஜய

அநுபல்லவி.

ஜயயாமாம் கோபால
தீனம் பா லயபாலா ஜய

சரணம்.

தேவமையா சரிதாமிதம்
தீன தயா அபராதம்
ஸ்ரீவசுதா திபக்ருபயா
கேவால மஹாதானுகி ஜய

ஈக்ஷேதா	பகதேஹே	
ஈசஜக்ம	திகிரிஹே	
வீக்ஷாசி	கைஷதமோஹே	
வேதாந்தக	மகேஹே	ஜய
கெஜதண்ட	கோடிதனே	
ஜந்துராந்தர	ஸாதனே	
அகணுதசும்	ஜாதமனே	
அபரி மிதாஸ்	ருத்தேனே	ஜய

மிஸ் புளூட். ருக்மணி பாடியது.

பிளேட் நே. 6501, ஸாஜன ஜீவனு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஸாஜன	ஜீவனு	ராம	
ஸாகுண	பூஷணு	ராம	ஸா

அநுபல்லவி.

புஜகபூஷ	ணுஸ்ரித	
புஜக	ஜுவனு	
அஜவந்தித	ஸ்ரிதஸந்தன	
தசதுரங்கமா	ராமா	ஸா

சரணம்.

சாருநேத்ர	ஸ்ரீகளத்ர	
ஸ்ரீரம்ய	காத்ர	
தாரக நாமஸா	சரித்ர	
தசரத	புத்ர	
தாரகாதிபா	கண	
தர்ம	பாலகா	
தாரயரகு	வர நிர்மல	
தியாக	ராஜநுத ராமா	ஸா

ஆர்மோனியம்

உரையூர் T-M காதர்பாஷா

பாடியது.

பிளேட் நெ, 1719 மதுராபுரி நிதக்ரீடதாரி.

இராகம்-கனத கதுகலம்-தாளம்-ஆதி.

(அநுபல்லவியிலிருந்து எடுப்பு.)

பல்லவி.

மதுராபுரி நிதக்ரீடதாரி
மங்களம் ததும்பும் சம்பிரம அம்பிகா ம

அநுபல்லவி.

கதனகுது கலராகப்பிரியே
கண்டணி மீனுக்ஷி காருண்ய கடாக்ஷி க

சரணம்.

சந்ததமும் நானே சிந்தனை செய்தேனே
மைந்தன் நம்பினேனே
வந்தருள் செந்தேனே
சுந்தரன் சதா துதி பூரணி
துவாரகா ஸ்ரீகண்ணன் சோதரி திரிசூலி க

பிளேட் நெ, 2422 சத்துஹை குருபரன்

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

சத்துஹை குருபரன் யாரசூலே ஹரேதில்
யாரசூலே ஹரதீமதீமத நேயே குல்லாபீ
தீமதீம்த நேயே குல்லாபீ
தீமதீமத நேயே குல்லாபீ
ஆகமேத்தோர் ஹேயே ஆபிலொன்
பாலே ஆஹான்
ஆகதேத்தோ ஹேயே ஜுஜபீர்பிரகேந்தரசோனி ஆஹான்
குயிலான் ரசூல்
தாத்மஹாத்தே ஹபக்குக்துங் ஹரேதும் நேதுவாலே

ஒன்பதாம்பாகம் முற்றிற்று.